1449

சமாஜ வெளியீடு.

கண் ஞ லலார்

அ

# பஞ்சா மாலை

## மூலமும்—ப உரையும்

8MAR

பதிப்பாசிரியர் :

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை

திருவாரூர் - சோமசுந்தர தேசிகர்

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
கப்ப நாய்க்கன் தெரு, சென்னை.
.] 1932. [விலை அணா

0-194MKV3,P
N32
142880

சமாஜ வெளியீடு.

கண்ணுடைய வள்ளலார்

அருளிச் செய்த

# பஞ்சாக்கர மாலை

## மூலமும்—பழைய உரையும்

பதிப்பாசிரியர்:

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை

திருவாரூர் - சோமசுந்தர தேசிகர்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

*All Rights Reserved.*] 1932. [விலை அணா 4.

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை,
சென்னை.

1449.
O-194MKU3,P
N32

உ

சிவமயம்

# முன்னுரை

---

ஏது மொன்று மறிவில ராயினும்
ஓதி யஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமு மகிழ்வர்மாற் பேறரே.

'சிவாய நமவென்று சிந்திப்பார்க் கபாயமங் கொருநாளு மில்லை' யென்று ஒரு பெரியார் திருவாய்மலர்ந்தருளினர். 'பஞ்சாட்சர செபம் பண்ணினல் வாசனுமலம் போம்' என்று கூறும் சிவஞான போதச் சூரணிக்கொத்து. இவ்வாறு மேம்பட்ட மந்திரத்தின் இலக்கணங்களை ஆகமங்கள் தெள்ளத் தெளியக் கூறுகின்றனவாயினும் அவையெல்லாம் வடமொழியிலே யுள்ளனவாம். இக்காரணத்தால் தமிழ்மக்கள் அவற்றின் விரிவை யெல்லாம் அறிவதரிதாகின்றது. இப்பஞ்சாட்சர மந்திரம் உச்சரிக்கு முறையும் பலதிறமாகக் காணப்படும். 'நாதநாம நமச்சிவாயவே', 'நமச்சிவாய வாழ்க' என்று தேவார திருவாசகங்கள் கூறும். ஆயினும் 'சித்தமொருக்கிச் 'சிவாயநம' வென்றிருக்கினல்லால்' என்பதும் தேவாரமே. இவ்வாறு பேதப்படும் இம் மந்திரத்தின் விரிவை யெல்லாம் பஞ்சாக்கரமாலை என்ற இச் சிறு நூலிலே பரக்கக் காணலாம்.

இந்நூல் காப்பு உள்பட அறுபது வெண்பாக்களை யுடையது. தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், சீவன்முத்தர் ஞானபூசைக் கிரமம் என்ற மூன்று பிரிவினை யுடையது. தூல பஞ்சாக்கரம், பஞ்சாக்கரம் தோற்றிய முறையும், சிவலிங்கத்தில் அவ்வக்கரங்கள் நிற்கும் முறையும், சத்திகளை யதிட்டிக்கு முறையும் கூறும். சூக்கும பஞ்சாக்கரம் சிவானுபவம் அடையும் விதத்தையும், சிவானுபவத்தையும் கூறும். பிற்பகுதி ஞானபாதத்தில் செய்யும் பூசைக் கிரமத்தை விவரிக்கும். இவ்வரிய நூலை இயற்றிய பெரியார் ஆளுடைய

பிள்ளையாராம் திருஞானசம்பந்தப் பெருமான் திருவவதாரஞ் செய்த திருப்பதியான சீகாழியில் அவர் வழியில் வந்த **கண்ணுடைய வள்ளல்** பெருமான் ஆவர். இந்நூலுக்குப் பொழிப்புரை யொன்றுளது. அதனை யியற்றிய பெரியார் யாவரென விளங்கவில்லை. இந்நூல் மூல மட்டும் இற்றைக்கு முப்பத்து நான்கு ஆண்டுகட்கு முன்னர் '1898-ம் ஆண்டு மதராஸ் ரிப்பன் பிரஸில் வெளியிடப் பட்டது' எனினும் உரையின்மையால் பல இடங்கள் விளக்கமின்றியும் பல சொற்கள் பிறழ்ந்தும் காணப்பட்டன. இந்நூலின் ஏட்டுப் பிரதி யொன்று அடியேனிட மிருந்தது. இந்நூலை அச்சிட முயலுவதை யறிந்த தருமையாதீனத்து அடியார் குழாத்துள் ஒருவரும், வித்துவானு மான ஸ்ரீமத் சட்டைநாத முனிவர் திருப்பனந்தாள் காசி மடத்துப் புத்தக நிலையத்திலிருந்த மூன்று ஏடுகளைப் பார்த்து ஒரு படி யெடுத் தனுப்பினர்கள். அவர்கள் செய்யாமற் செய்த வுதவிக்கு என்றும் கடப்பாடுடையேன். பின்னும் சென்னை இராசாங்கத்துக் கை யெழுத்துப் புத்தகசாலையிலுள்ள பிரதியோடும் ஒப்பு நோக்கினேன். இவற்றால் இந்நூல் அடைந்த திருத்தம் பல. (கு - ரை) என்று காணப்படும் குறிப்புக்கள் என்னால் எழுதப்பட்டன. அவகாசமின்மை யால் முழுவதும் எழுதப்படவில்லை.

இந்நூலைச் **சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்** காரியதரிசியாகிய சைவத் திருவாளர் ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் 'சித்தாந்தத்'தின் மூலமாக வெளியிட முன் வந்தமைக்குத் தமிழுல கம் என்றும் அன்னார்க்கு நன்றி செலுத்துங் கடப்பாடுடையது.

அஞ்செழுத்தெனுமருமறைமந்திரமதனை
நெஞ்சழுத்தவர்முழுமுதற்றேவனைநிகர்ப்பார்
பஞ்சபாதகர்மீதுமற்றவர்நிழற்படினுஞ்
செஞ்சவேயவர்க்காண்கினும்பவந்தொலைசெல்லும்.

மயிலாப்பூர்,
13-2-32.

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை
திருவாரூர் - சோமசுந்தர தேசிகர்.

# பஞ்சாக்கர மாலை

## மூலமும்—பழைய உரையும்

3:51
181.48L17

### காப்பு

1 வாரம் பரிவுபெற வந்தித்து முப்பொழுதா
நேரம் பணிந்து நினைந்துருகி—யேரம்ப
னைஞ்சுமுகச் சிந்துரனுக் காளானாற் சண்டனமக்
கஞ்சுமெழுத் தஞ்சுமர ணாம்.

[இது விநாயகர் துதி]

(இ-ள்.) அன்பினாலும் பத்தியினாலும் தோத்திரஞ் செய்து மூன்று காலமான சந்திகளில் நமக்கரித்து அனுசந்தானம் பண்ணி உள்ள முருகி ஏரம்பக் கணபதி யென்னுந் திருநாமத்தையுடையவனாய் அஞ்சு முகங்களையுடைய ஞான வானையாகிய விநாயகனுக்கு அடிமையானால், மறலி நம்மைக் கண்டால் அஞ்சுவன். எழுத்தஞ்சாய ஸ்ரீ பஞ்சாக்கரம் நமக்குக் காவலாம்.

[கு-ரை.] வாரம்: அன்பு. பரிவு: பக்தி. முப்பொழுதாம் நேரம் பணிந்து: ஸாயகஸ்ய ஸம்த்யாத்ரய ஹேதி | கிரியா தீபிகை. அனுசந்தானம்: இடைவிடாது தியானிக்கை.

2 கல்லேன் பிறநூல்கள்[1] ; காழியர்கோன் பாடலல்லாற்
சொல்லேன் ; சுரரைத் தொழநினையேன்—நல்லசிறு
செஞ்சதங்கை கொஞ்சுதண்டைச் சிற்றடிக்கன்[2] பாக
தஞ்சுதங்கை யாமலக மாம்.

[வெழுத்

[குருத்துதி]

(இ - ள்.) பதிவாக்கிய மல்லாத நூல்களை யதிகரியேன்; காழிக் கவுணியன் பாடலாகிய திருப்பதிகங்களே யன்றி மந்திரங்களே யாயினுஞ் சொல்லேன்; அவன் சிற்றடியன்றி மந்திர ரூபிகளையும் பணிதற்கு நினைவதுஞ் செய்யேன். நல்லதாய்ச் சிறியதாய்ச் செம்பொன்னாற் செய்த சதங்கையுடன் தண்டை பொருந்திய அந்தத் திருவடிக்கு அன்புண்டானாற் பஞ்சாக்கரமானது என்னுடைய அழகிய கையில் நெல்லிக்கனி போலப்பலிக்கும். உ.

[கு - ரை.] பதிவாக்கியம்: சிவபெருமானே கடவுள் என்பது; 'கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்' என்றார் திருநாவுக்கரையரும். காழிக்கவுணியன்: திருஞானசம்பந்தர்; காழியர் கோன்கழல் போற்றி. மந்திரேசுரர்: அஷ்டவித்தியேசுரர் முதலியோர்; அவராவார் சுத்தவித்தியா தத்துவத்திலுள்ள சப்தகோடி மகாமந்திராதியர். அஷ்டவித்தியேசுரராவார் அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், மூர்த்தி, சீகண்டர், சிகண்டி.

(பி - ம்.) 1 பிறர் நூல்கள். 2 சீறடி.

## நூல்

3 அஞ்செழுத்து மைம்பத்தொன் றுமெழுத்துப் போலன்
நெஞ்சழுத்து முட்பொருளை நீநினைந்து—தஞ்சமென[றி
வெங்குநிறை வானமையு மிவ்வெழுத்தா மவ்வடிவிற்
றங்குபொரு ளானமையுஞ் சாற்று.

[இது நிட்கள வெழுத்து அஞ்சும் சகளவெழுத்தில்
நிற்கும் நிலை சொன்னது]

(இ - ள்.) பஞ்சாக்கரங்களை ஐம்பத்தோரக்கரங்களைப் போல எழுத்தென்று நினையாமல் அறிவிலே வடிவற நின்றழுந்தும் எழுத்துக்களென்று உட்பொருளை நினைந்து அந்த அஞ்செழுத்தே யாவர்க்கும் தஞ்சமாக, எங்கும் பூரணமாய் நிற்கும் நிலையுந் தரிசித்து, அந்தப் பொருளஞ்சும் இந்த எழுத்தாகி நிற்கும் நிலையும் அறிவாய். க

[கு - ரை.] அறிவிலே வடிவறநின்று அழுந்தும் எழுத்துக்கள் என்றது. அகார வுகார மகங்காரம் புத்தி மகாரம் மனம் (சி. போ. iv. வெ 4) என்றதனை நோக்கி.

மன்னு மகாரம் மனஞ்செலுத்தும் புத்தியினை
உன்னு முகார முபகரிக்கும்—முன்னாகும்
ஆங்காரந் தன்னை யகாரஞ் செலுத்தியிடும். துகளறுபோதம்,14.

அவ்வுட னுவ்வு மவ்வு மனம்புத்தி யகங்கா ரங்கள்
செவ்விய விந்து நாதஞ் சித்தமோ டுள்ள மாகும். சிவ - சித்தி, 193.

அஞ்செழுத்தே எங்கும் பூரணமாய் நிற்கும் நிலை : அயன், அரி, அரன், ஈசன், சதாசிவன் முறையே அகங்காரம், புத்தி, மனம், சித்தம், உள்ளம் இவைகளை நடத்தி வியாபிக்கும். சிவ-சித்தி 193, 194.

4 தாபரமாம் லிங்கத்திற் சங்கமத்திற் றண்டுலத்திற்[1]
தீபரவு குண்டத்திற் சிந்திக்க—மாபரனு
ரங்கங்குத் தோற்றுதல்போ லஞ்செழுத்தா மப்பொரு
கங்கங்க ளாமெழுத்தஞ்[2] சும். [ளுக்

[இது சிவபெருமான் சிவலிங்கத்தினிடத்திற் பிரசன்னம்போல பஞ்சாக்கரத்திலும் பிரசன்னமாம் என்பது]

(இ - ள்.) தாபரமாகிய சிவலிங்கப் பெருமானிடத்திலும், உற்சவ பேதங்களிடத்திலும், வேதிகையிடத்திலும், அக்கினி குண்டத்திலும் ஆவாகித்துத் தியானிக்க, நிட்களமாகிய சிவன் அந்தந்த இடங்களிலே பிரசன்னமானாற்போல, பஞ்சாக்கரமாகிய நிட்களப் பொருள்களும் இந்த வடிவாகிய பஞ்சாக்கரங்களிலே தரிசனப்பட்டவர்களுக்குத் தோன்றும். உ

[கு - ரை.] தாபரமாகிய சிவலிங்கப்பெருமானாவது திருக்கோயில்களில் எழுந்தருளி யிருக்கும் மூலத்தானங்கள். தண்டிலம், தண்டுலம் ஒரு பொருளன. 'தருமணன் மணிமுத்தாகத் தண்டுலமியற்றி' என்பது சூளாமணி ; 'தண்டிலந்தனினும் பகர்தரு மிலிங்கமூர்த்தியினும்' என்பது காஞ்சிப் புராணம்.

(பி - ம்.) 1 தண்டிலத்தில். 2 எழுத்தீதஞ்சு.

5 அகராதி யீரெட்டா மச்சொழித்தை யைந்தா
முகராதி யைநான்கொன் றென்று—ஙகராதி
சுன்மூன்று நீக்கிநமச் சொல்லிமக ராதிபத்தி
னன்மூன்று லஞ்செழுத்தா நன்கு.

[இது பஞ்சாக்ஷரத்துக்கு அக்கரச்சேர்வைவிதி சொன்னது; சிவலிங்கத்துக்குப் பாடாணசுத்தி சொன்னதுமாம்.]

(இ-ள்.) அகார உகார மகாரங்களிடத்திற் றோற்றப்பட்ட ஐம்பத்தோரட்சரத்திலும் பிரமாவினுடைய வங்கிசமாகிய அகாரத்திற் றோன்றிய அச்சாகிய பதினாறு எழுத்தையும் கீழாகக் கழித்து, உகாரத்திற் றோன்றிய இருபத்தஞ்சு எழுத்தாகிய கவர்க்கம் நான்கும், சவர்க்கம் நான்கும், தவர்க்கம் நான்கும், பவர்க்கம் நான்கும் ஆக இருபதெழுத்தும் ங, ஞ, ண, ந, ம வாகிய சுன்னெழுத்து ஐந்தும் ஆக இவ் இருபத்தைந்தெழுத்தும் விட்டுணு வங்கிசமாகிய உகாரத்திற் றோன்றினமையால் இதுவுங் கீழாகத் தள்ளிச் சிவனை நமக்காரம் பண்ணுதல் விட்டுணுவுக்குள்ள தொழிலாகையால், சுன்னாகிய எழுத்தஞ்சில் ஙகார ஞகார ணகாரமாகிய மூன்றெழுத்தையும் நீக்கி நகார மகாரமாகிய இரண்டெழுத்தையுங் கூட்டி நமவாக்கி, அப்பால் உருத்திராங்கிசமும் மயேச்சுராங்கிசமும் சதாசிவாங்கிசமும் விந்து நாதமுமாகிய மகாரத்திற் றோன்றிய எழுத்து பத்தினுட் சிகார வகார யகாரங்களாகிய அக்கரங்களைக் கூட்டிச் சிவாய என வைத்து நமசிவாய எனச் சிவனையும் சிவனை நமக்காரஞ் செய்வாரையுங் காட்டியது. ரு

6 தொழுதிடுதல் சுத்தனெனுந் தூயோன் பொருட்டென்
றெழுமொழியாய் நிற்கு மியல்பாய்—வழுவறவே
தூலமு வைந்தாகிச் சூக்குமமு வைந்தாகு
மேலுரைக்கிற் றன்பெருகு மிக்கு.

(இ-ள்.) சுருதி மிருதி பிரம விட்டுணுக்கள் முதலாயுள்ளார் நமக்கரிக்கைக்குத் தேவனாயுள்ளவன் நின்மலனாகிய சிவன்; அவன் பொருட்டு நமக்காரமென்ற சத்தத்துக்கு அர்த்தமாய் வெளிப்பொருளாய் யாவர்க்குந் தெரியாத பொருளாகிய தூல பஞ்சாக்கரம் பதினைந்து சூக்கும பஞ்சாக்கரம் பதினைந்துமாக திவ்வியாகமங்களில் அரு

ளிச் செய்தவாறு இந்நூலிற் சொல்லப்பட்டது. அனைத்தும் விரிக்கிற் பெருகும். ௬

## தூல பஞ்சாக்கரம்

7 ஓங்கு மகார வுகார மகாரமதன்
பாங்கணையும் விந்துப் பரநாதம்—ஆங்குப்
பிரணவமாய்ப் பீடங்க ளாய்ப்பிரம ரேகை
மருவுநக ராதியுடன்[1] வந்து.

[இது நகராதியாக நகரங் கீழ்ப்பீடமும், மகரம் நடுக்கண்டமும், சிகரம் மேற்பீடமும், வகரம் கலவபத்திரமும், யகரம் மேற்பூசாங்கிசமுமான சிவலிங்கமும் தூலபஞ்சாக்கரமென்றது.]

(இ - ள்.) அகார வுகார மகாரங்கள் மூன்றுந் தம்மிற்கூடிப் பிரணவமாம். அவை சிவலிங்கத்துக்கு அகாரங் கீழ்ப்பீடமும் உகாரம் நடுக்கண்டமும் மகாரம் மேற்பீடமுமாம். மகாரத்தில் உரைப்பு கலவ பத்திரத்துடன் அட்டபெந்தனத் தானமும் பிரம ரேகையாகத் திருமேனியைச் சுற்றின ரேகைக்குக்கீழ் சதாசிவத்தானமுமாம். சுற்றின ரேகை விந்துத்தானமும் மேல் முகுளிதமாக எழுந்திருந்தது நாதமும், அப்பாலுள்ள திருமேனி பரவிந்துவும் பரநாதமுமாக, சிவலிங்கப் பெருமானுக்குக் கீழ்ப்பீடமும் திருமேனியானது. ௧

[கு - ரை.] அகார வுகார மகங்காரம் புத்தி.........நாத முளவடிவா நாடிற் பிரணவமாம். (சி. போ.)

(பி - ம்.) 1 நகராதியுமன் வந்து.

8 பிரமன்கீழ் மாயனடுப் பிஞ்ஞகன்மே லீசன்
பரமுள்ள லிங்கத்தின் பாங்காம்—தெரிவுறுமப்
பூசாங்கம் விந்துவுட ஞதம் புணர்ந்தநிலை
பேசாய் நகராதி பெற்று.

(இ - ள்.) முன் சொன்ன கீழ்ப்பீடம் பிரமாவைச் சேட்டிக்கும் பிரமசத்திக்கு அதிட்டானமாக விருக்கும். நடுவிற் கண்டம் விட்டுணுவைச் சேட்டிக்கும் விட்டுணு சத்திக்கு அதிட்டானமாகவிருக்கும். மேற்பீடம் உருத்திரனைச் சேட்டிக்கும் உருத்திர சத்திக்கு அதிட்

டானமாக விருக்கும். கலவபத்திரம் மகேசுரனைச் சேட்டிக்கும் மகேசுர சத்திக் கதிட்டானமாகவிருக்கும். இந்த நாலு காரணேசுரருக் கும் இடம் எதென்னில் தூணுகாரமாயும், சதுரமாயும், வட்டங்களா யும், திரிகோணங்கள்பெற்று வரையுடைத்தாயும், பீடம் மூன்றினுக் குள்ளிலும் அடங்கின இலிங்கத்தினுடைய அதோபாகமாய்த் தன் னுடைய சத்திகளாகிய பீடங்கள் மட்டிலே அந்த நாலுகாரணேசுர ருக்கும் இடமா யிருக்கும். இவை பீடங்களான் மறைந்து தெரியாத இலிங்கம். இனி, பீடத்திற்கு மேற் பூசாங்கிசமான சிவலிங்கமாய், மேல் விந்து நாதமாய் விந்து நாதத்தின் கூட்டுறவாகிய பீடத்துக்கு மேற்பட்ட இடத்தில் சதாசிவம் நிலைபெற்றிருக்கும். இவைகள் அஞ்சையும் நகரமாதியாகிய தூல பஞ்சாக்கரமாகக் காணப்படும். உ

9 மண்ணீ ரனனிலம் வான்கந்த மாதிகுண
மெண்ணீரைந் தா[1] மிந்தி யங்கடின—முண்ணெகிழ்ச்சி
வெம்மை சலிப்பு[2] வெளிகுணியே தானுக
நம்முதலாய் நிற்கு நயந்து.

(இ - ள்.) பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் ஐந்திலும் இவை களுக்குக் குணமாகிய கந்தம் இரதம் ரூபம் பரிசம் சத்தம் ஐந்தும், ஆக் கிராணம் சிங்குவை சட்சு தொக்கு சோத்திரமாகிய ஞானேந்திரியம் ஐந்தும், உபத்தம் பாயுரு பாணி பாதம் வாக்காகிய கன்மேந்திரியம் ஐந்தும், கடினம் நெகிழ்ச்சி வெம்மை சலிப்பு வெளியாகிய பூதகுணி 3 ஐந்துமாகிய இவைகளைக் கூட்டிச் சேட்டிப்பன் நகர முதலாகிய தூல பஞ்சாக்கரத்தினுல். ரு

(பி - ம்.) 1 ஐஞ்சாம். 2 நலிப்பு. 3. குணம் ?

10 சேர்ந்த நிவர்த்திபிர திட்டை திகழ்வித்தை
சாந்தியுடன் சாந்தியா தீதகலை—சேர்ந்த
கருமங் துலையொப்புக் காணு மளவுந்
தரும்நக ராதிமுதற் றுன்[1] .

(இ - ள்.) பிருதிவி தத்துவம் இடமாகக் கட்டுப்பட்ட கன்மம் கிடக்கும் நிவர்த்தி கலையும், அப்பு தத்துவம் இடமாகக் கட்டுப்பட்ட கன்மம் கிடக்கும் பிரதிட்டாகலையும், தேயு தத்துவம் இடமாகக் கட்

டுப்பட்ட கன்மம் கிடக்கும் வித்தியாகலையும், வாயு தத்துவம் இடமாகக் கட்டுப்பட்ட கன்மம் கிடக்கும் சாந்திகலையும் ஆகாச தத்துவம் இடமாகக் கட்டுப்பட்ட கன்மம் கிடக்கும் சாந்தியதீதகலையும் ஆகிய பஞ்சகலைகளினும் சர்வான்மாக்களுக்கும் செய்த கன்மங்களைச் சேர்த்திக் கன்மம் துலையொக்குமளவும் இவைகளை நிவர்த்தியாதிகலை முதலாக நகராதியான தூலபஞ்சாக்கரம் அஞ்சும் நின்று நடத்தும். ௪

(பி - ம்.) 1 தருமன் னகாரமுதற் றூன். (அச்சுப் பிரதி.)

11 சாக்கிரமே யாதி தருமவத்தை யைந்தினையு
நீக்கவருஞ் சுத்த நிகழ்கருவி—யாக்கியிடு
மேலா லவத்தைவர மேவியுணர் விக்குமதன்
பாலா நகராதி பண்பு.

(இ - ள்.) கீழாலவத்தையும் மத்தியாலவத்தையும் தரிசிக்கும்போது, சுத்தவித்தையைக்கொண்டு சாக்கிராவவத்தையையும், மயேச்சுரத்தைக்கொண்டு சொப்பனவவத்தையையும், சதாசிவத்தைக் கொண்டு சுழுத்தியவத்தையையும், சத்திதத்துவத்தைக் கொண்டு துரியாவவத்தையையும், நாததத்துவத்தைக் கொண்டு அதீதவவத்தையையும் இப்படிப் பஞ்ச தத்துவங்களைக் கொண்டு அவத்தைகளைத் தரிசித்து அவ்வளவிலே நின்றால் சுத்தவித்தை முதலான ஐந்து தத்துவங்களினிடமாக நின்று நகராதியான அஞ்செழுத்தென்னும் தூலபஞ்சாக்கரம் பதமுத்திகளைக் கொடுக்கும். ௫

12 வருஞ்சத்தி யோசாதம் வாமமகோ ரந்தற்
புருடத்தோ டீசானம் போற்றக்—கருமப்[1]
பரிபாக நோக்கிப் படைப்பாதி சத்தி
தெரிவா நகராதி சேர்ந்து.

(இ - ள்.) சத்தியோசாதம் வாமம் அகோரம் தற்புருடம் ஈசானமாகிய ஐந்து திருமுகங்களிலும் ஆன்மாக்களுக்குக் கன்ம பரிபாகம் பிறக்குமளவும் சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகமாகிய பஞ்ச கிருத்தியங்களைச் செய்விக்கும் பஞ்ச சக்திகளை யதிட்டித்துக் கொண்டிருப்பன நகராதியான தூல பஞ்சாக்கரம். ௬

(பி - ம்.) 1 கன்ம பரிபாகம்.

13 கன்மசா தாக்கியத்திற் கத்திருசா தாக்கியத்தின்
றன்மைதரு மூர்த்தியமூர்த் தங்களென—நன்மையுருச்
செய்தசா தாக்கியத்திற் சேர்சிவசா தாக்கியத்தி
லெய்துநக ராதிகடா னெண்.[1]

(இ - ள்.) பீடலிங்கமாய் அஞ்சுமுகமான கன்மசாதாக்கியத்திலும், நாலுமுகமாகிய பீடமில்லாத இலிங்க சொரூபமான கத்திரு சாதாக்கியத்திலும், ஏகமுகமான மூர்த்தி சாதாக்கியத்திலும், சோதிலிங்கமான அமூர்த்திசாதாக்கியத்திலும், ஞானமயமான சிவ சாதாக்கியத்திலும், நிற்பன நகராதியான ஐந்து தூல பஞ்சாக்கரம். எ

[கு - ரை.] கன்ம சாதாக்கிய மென்பது நிவர்த்தியான கிரியையிலே தோன்றி நாத மயமான லிங்கத்தையும், பிந்து மயமாகிய பீடத்தையும் பொருத்தித் தொழிற்பட்டிருக்கும்; கர்த்திரு சாதாக்கியம் பிரதிஷ்டையான ஞானத்திற் றோன்றி பளிங்கொளியாய் திவ்ய லிங்கமுமாய் நடுவில் நான்கு முகங்களும் எட்டுக் கைகளுமுடையதாகவுமிருக்கும். மூர்த்தி சாதாக்கியம் இச்சாசத்தியிலுண்டாகி காலாக்கினியை யொத்த பிரகாசத்தை யுடையதாய் இலிங்கவடிவாகி அதன் ஊர்த்துவபாகத்தில் ஒரு திருமுகமுடையதாகவிருக்கும்; அமூர்த்தி சாதாக்கியம் சாந்தியான ஆதிசத்தியிற்றோன்றி கோாஸ்தம்பாகிருதியாக கோடி சூரியப்பிரகாச முடையதாக விருக்கும்; சிவசாதாக்கியம் சாந்தியதீதையான பராசத்தியிற் றோன்றி அதிசூக்குமமாய் அளவிலாச் சோதிமயமாக விருக்கும். பொதுவாகக் கூறுமிடத்துப் பரசிவம் பரை, அபரை, இச்சா, ஞான, கிரியாசத்திகளோடுகூடி ஈசான முதலான மூர்த்த பேதங்களாகும். இதன் விரிவைச் சதாசிவ ரூபத்திற் காண்க.

(பி - ம்.) 1 என்.

14 பன்னுவியோ மாத்திரமும் பாசுப தாத்திரமு
முன்னுவகோ ராத்திரமு மொண்சுரிகை—யென்னவரு
மத்திரமு மன்னுசிவ வத்திரமு நம்முதலாய்ச்
சத்தியமா திக்குள்ளாந் தான்.

(இ - ள்.) சத்தியோசாதத் திருமுகத் துவாரத்தின் நின்ற வியோமாத்திரமும் வாமதேவத் திருமுகத் துவாரத்தினின்ற பாசுபதாத்திர

மும் அகோரமுகத் துவாரத்தினின்ற அகோராத்திரமும் தற்புருட முகத்துவாரத்தினின்ற சுரிகாத்திரமும் ஈசான முகத்துவாரத்தினின்ற சிவாத்திரமுமாகிய பஞ்சவத்திரமும் பாசச்சேதம் பண்ணுவதாய் நின்று சாதிக்கும் சிவாத்திரமாகவும் ஆக வியோமாத்திர முதலான அஞ்சத்திரத்திலும் நகராதியான தூல பஞ்சாக்கரம் நிற்கும். இவற்றில், நித்திய நைமித்திக தீக்கை பிரதிட்டை மகோற்சவ முதலான விவையிற்றுக்குப் பாசுபதாத்திரமாகவும், அனுக்கிரக நிக்கிரகங்கள் பண்ணுவது மூர்த்திகொண்ட அகோராத்திரமாகவும், இட்டகாமியங்களைக் கொடுப்பது சுரிகாத்திரமாகவும், நித்தியபூசைக்கு அத்திரத் துவாரபாலராய் நிற்பது வியோமாத்திரமாகவும் கொள்வர். இவையிற்றில் வடிவறுதியான சிவாத்திர மொழிய நின்ற நான்கத்திரமும் பூசையிலே போகாங்கத்திற் காணப்படும். அ

15 சேர்த்த விதயஞ் சிரசு சிகைகவச
நேத்திரமென் றைந்தாகி நின்மலமே—யார்த்துளதாம்
அங்கங் களைந்தா யணுவாகிப் போகமவை
தங்குநக ராதிகளாற் றான்.

(இ - ள்.) இருதயஞ், சிரசு, சிகை, கவசம் நேத்திர மென்னும் ஐந்தும் திருமேனியாக நின்ற வங்கங்களைத் தியானஞ் செய்து, அந்த நிலைகளைப் பெற்ற அணுசதாசிவரானவர் இருதயத்திற்கு அக்கினி திக்கிலும், சிரசிற்கு ஈசானதிக்கிலும், சிகைக்கு நிருதிதிக்கிலும், கவசத்திற்கு வாயுதிக்கிலும், நேத்திரத்திற்கு ஈசானத்திலும் மேற்கிலுமாகச் சதாசிவ மூர்த்தியைப் போகாங்கமாகச் செபித்திருப்பார்களாகையால், அந்த இருதயாதி ஐந்திடத்திலும் நகராதியான தூலபஞ்சாக்கரம் அஞ்சும் பஞ்சானுக்கிரகத்தைப் பண்ணிநிற்கும். கூ

16 வாக்கவையாம் வைகரிமுன் மத்திமை பைசந்தி
சூக்குமைமா மாயையிவை தோன்றியே—யாக்கமுடனித்தமாம்[1] வாக்கைந்து நிற்கநக ராதிகடாம்
வைத்ததா மென்றுணர்வாய்[2] மற்று.

(இ - ள்.) வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமை, சுத்தமாயையாதிய ஐந்து வாக்கிலும் நகராதியாகிய தூலபஞ்சாக்கர மைந்தும்

நின்று இந்த வாக்குகளினால் ஐம்பத்தோ ரக்கரங்களைப் பிறப்பித்தும், அவைகளால் எண்பத்தொரு பதத்தையும் சப்தகோடி மகாமந்திரங் களையும் சதுர்வேதங்கள் முதலான விவையிற்றையும் உண்டாக்கி வைகரி வியவகரிக்கும். க௦

(பி - ம்.) 1 நித்தமாய். 2 றருள்வா.

17 சத்திகடான் சத்தியத்தி லெட்டுத் தசமூன்று
மத்தகைவா மத்திலகோ ரத்திருநான்—கொத்தநான்
கப்புருடத் தைந்தீசத் தாமுப்பத் தெண்கலையி
னொப்பினக ராதி யுறும்.

(இ - ள்.) சத்தியோசாதத்தில் எட்டுச் சத்தியும், வாமதேவத்தில் பதின் மூன்று சத்தியும், அகோரத்தில் எட்டுச் சத்தியும், தற்புருடத் தில் நாலு சத்தியும், ஈசானத்தில் ஐந்து சத்தியும் நிலை பெற்றிருக் கும். சத்தியோசாதம் உபத்தத்திலும், வாமதேவம் குய்யத்திலும், அகோரம் இருதயத்திலும், தற்புருடம் வக்த்ரத்திலும், ஈசானம் மூர்த் தாவிலும் இப்படி அட்டத்திரிம்சா சக்திகளும் நிற்க, இவர்களைச் சத்தியோசாத மாதியாக நகாராதி ஐந்துமான தூலபஞ்சாக்கரம் சேட் டித்து நிற்கும். மரீசியாதியான சக்தி முப்பத்தெட்டையும் ஈசான சர்வவென்னும் பதங்கள் முப்பத்தெட்டையும் சிவாகமங்களிற் கண்டு கொள்க. கக

18 படைத்து மவையளித்தும் பண்ணியவை யெல்லாந்
துடைத்து மறைத்துந் துயர்நின்—றெடுத்து
மொழியாத வைந்தொழிலு முய்த்திடுநவ்[1] வாதி
மொழியான வஞ்செழுத்து முன்.

(இ - ள்.) சிருட்டித்துந், திதித்துஞ், சங்கரித்துந் திரோபவித் தும், அனுக்கிரகித்தும் நிற்கும் பஞ்சகிருத்தியத்தை நகாரதியான தூலபஞ்சாக்கரம் ஐந்தும் நடத்தும். க௨

(பி - ம்.) 1 உய்ந்திடும்.

19 பிராணாதி காலைந்தும் பேதித்து நிற்கக்
கிராணாதி யைந்தினையுங் கிட்டித்—திராணமெனுங்

கந்தாதி யைந்தினையு நாகாதி கால்கொள்ளு
முய்ந்தே நகராதி யுற்று.

(இ - ள்.) பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன் என்னும் இவை யைந்தும் தேகத்திலே ஒவ்வோர் இடங்களைப் பற்றிநிற்க, நாகன், கிருகரன், கூர்மன், தேவதத்தன், தனஞ்செயன் என்னு மிவை யைந்தும் ஆக்கிராணம், சிங்குவை, சட்சு, தொக்கு, சோத்திரம் இவைகளிலே நின்று கந்தம் ரசம் ரூபம் பரிசம் சத்த மிவைகளைக் கிரகிக்கத்தக்கதாக நகராதியான தூலபஞ்சாக்கரம் ஐந்தும் நிற்கும். கரு

20 வித்தை கலையோ டிராக மிகுசுத்த [போய்
வித்தைமுதன் மூன்றியற்ற விந்துமுதல்—உய்த்திடும்
மாயை நியதியைப்பின் மன்னுதுடி மானையிவற்
றேயுநக ராதிகடா னீங்கு.

(இ - ள்.) வித்தியா தத்துவத்தையும் கலாதத்துவத்தையும் அராக தத்துவத்தையும், அடைவே சுத்தவித்தையும் மயேசுரமும் சாதாக்கியமும் சேட்டித்து ஆன்மாவினிடத்தே ஞானத்தையும் இச்சையையும் கிரியையும் எழப்பண்ணி, விந்துவானது அசுத்தமாயையையும், நாதம் நியதியையும் காலத்தையும் புமானாகிய புருடனையும் சேட்டிக்க நகாராதியான தூலபஞ்சாக்கரம் ஐந்தும் சுத்தைவித்தையாதியான சிவதத்துவ மைந்தினும் நிற்கும். கசா

21 தானில்லை முன்னைத் தமமில்லை மன்னுமிறை
யோனில்லை சத்தியெனு மொன்றில்லை—மானில்லை
யென்றமுத லைந்தி னிழப்பதுவே பெத்தமென
நின்றநக ராதிகடா னேர்ந்து.

(இ - ள்.) பெத்தபஞ்சாக்கரத்தை யுச்சரித்து நின்றதனால் நவ் வென்னுமெழுத் தில்லையென்னும் பொருளைச் செவ்வதாகக்கண்டு தானும் தான்சேட்டிக்கின்ற ஆணவமும் அந்த ஆணவ மிழப்பித்தசிவமும் அருளும் இந்த வேறுபாடுகளெல்லாம் அறமயங்கின ஆன்மாவும் அறச் சர்வசூனியம் பண்ணுதலால் நவ்வாகிய தானில்லை ; மவ்வாகிய

மலமில்லை ; சிவ்வாகிய சிவமில்லை ; வவ்வாகிய அருளில்லை; யவ்வாகிய ஆன்மாவில்லை யெனவாக்கின. நகாராதியாகிய தூலபஞ்சாக்கரம் நின்ற முறைமையும் இவ்வாரும். கரு

தூல பஞ்சாக்கர முற்றும்.

---

## சூக்கும பஞ்சாக்கரம்

22 தூலமிது சூக்குமங்கேள் தூலம் பதினைந்தின்
பாலுளவாய் நின்று பயனறிந்து—மேலுணர்வில்
நின்றசிவ முன்னுக்க[1] நீநடுவாய் நின்றுநம
வென்றவைகீ ழிட்டே யிரு.

[இது சூக்கும பஞ்சாக்கரம் மாறிநின்ற நிலை சொன்னது]

(இ-ள்.) தூல பஞ்சாக்கரம் இவ்வாறு தரிசித்து இதில் ஆன்மவுபாதி, சிவவுபாதி விந்து நீக்கி, மேலாகிய ஞானவறிவினாலே முன் கீழ்ப்பட்ட சிவத்தையும் அருளையும் மேற்படுத்தி திரோபவத்தையும் ஆணவத்தையும் கீழ்ப்படுத்தி, தான் அருளிடமாக நடுவே நிற்பது சுத்தபஞ்சாக்கரமாகிய சூக்கும பஞ்சாக்கரம். க

(பி - ம்.) 1 முன்னாக.

23 ஆனந்த மாடவெளி யம்பலத்தி லானந்தித்
தானந்த மாமறைப்பின் றன்முதல்கெட்—டானந்த
மாறுத மேலீ டனவரதத் தாண்டவமாய்க்
கூறுத வஞ்செழுத்துங்[1] கூறு.[2]

(இ - ள்.) சிவானந்தத்தின் மேலீடாகிய திருக்கூத்து சிகாரமாக, இந்த ஆனந்தத்தை இவனுக்குத் தோற்றரவாக்கி இவனுக்குப் பாவாபாவ மிரண்டுமற, பரையாகிய சிதம்பரம் வகாரம் ; இதில் ஆனந்தமாகிய சுகமெல்லாம் தானற நின்று அனுபவிப்பது யகாரம் ; கீழ்ப்பட்ட ஆணவத்தையும் மேற்பட்ட சிவத்தையும் அறிவிப்பானான ஆன்மாவையும் இவைகள் அனைத்தினையும் தெரியாமல் மறைத்து நிற்பது நகாரம் ; ஒருகாலும் ஒழியாத ஆனந்தம் வளர்க்கைக்குத் தான் கெட்டுச் செல்லுமது மகாரம்; இப்படி யானந்தத் தாண்டவமாய் நிற்பது சுத்த பஞ்சாக்கரம். உ

1 அஞ்செழுத்தின். 2 கூத்து.

24 பரைதுடிவா ழிச்சை[1] பரிந்தளித்து வீசும்
வரதஞா னம்மபயம்[2] வன்னி—கிரியை
மலமழித்து நல்கும் மலரடிக ளிவ்வைந்[3]
துலைவி லுபாங்கமென வோது.

[இரண்டு திருவடிகளும் பாசச்சேதம் பண்ணும் என்றது.]

(இ-ள்.) தமருகம் பராசத்தியாகவும், வரதமாக வீசியகை இச்சா சத்தியாகவும், அபயமாக வமைத்த கை ஞானசக்தியாகவும், அக்கினி கிரியாசக்தியாகவும் அபசார மர்த்தனம்[4] பண்ணின திருவடித் தொழில் ஆதிசத்தியாகவும் உபாங்கங்களில் இவ்வகைத் திருக்கூத்து நிற்கையால், சிகாரம் பரையாகவும், வகாரம் இச்சையாகவும், யகாரம் ஞானமாகவும், நகாரம் அக்கினியாகவும்[5] மகாரம் மலமாகவும் சூக்கும பஞ்சாக்கரம் நிற்கும். ரு

(பி-ம்.) 1 வாளிச்சை. 2 வரதஞா னந்தபயம், வரதஞா ஞனந்த பயம். 3 மலரடி யிவ்வைந்தும். 4 அபத்தனம். 5 வன்னியாகவும்.

25 தற்பதத்திற் சீயொடுவாத் தாமிரண்டு நீயென்னுஞ்
சொற்பதத்தில் யவ்வுந் துரிசற்று—முற்பதநீ
யாகின்று யென்றபதத்[1] தற்றநம வும்பெற்றே[2]
யேயுந்தான் சத்திமூன் றென்.

(இ-ள்.) வேதாந்த மகாவாக்கியமாகிய தற்பதத்திற் சிவமும் அருளுமான சிகாரமும் வகாரமும், தொம்பதத்தில் ஆன்மாவாகிய யவ்வும், உபாதிகழன்ற அந்தப் பொருள் நீயாகின்று யென்ற அசிபதத்தில் ஆணவக்கேடும் விசுவமறைப்பும் பெறுதலால் திரோதாயியும் ஆணவமுமான அழிவே நித்தமாகப் பெற்று அத்தானத்திரயமான வட்டத்தில் தத்துவமசி யென்னும் மூன்று பதமும் தத்: அது, துவம்: நீ, அசி: ஆனாய் என்னும் தான வட்டத்திற் றிருக்கூத்துச் செய்தலால் இதிற் சிகரமாதியான சூக்கும பஞ்சாக்கரம் நின்றவாறு உணர்க. சு

(பி-ம்.) 1 என்றபடித். 2 வும்பெற்றேயுந்.

26 ஒத்த துடியிலுப தேசமியோ கம்வரதம்[1]
வைத்தவப யம்பரிசம் வன்னியினாற்—சுத்திசெயுங்

கன்மமிருட் கேட்டிற் கமலபதஞ் சூட்டுமிதன்
றன்மை யவுத்திரியே[2] தான்.

(இ - ள்.) தமருகமான பறையால் உபதேச தீட்சையும், வரதமாக வீசுங்கையான இச்சையினு லயிக்கியமான[3] யோகதீட்சையும், அபயமான ஞானத்தால் பரிசதீட்சையும், கிரியையான அக்கினியினற் பாசச்சேதனமாகிய சஞ்சிதநட்டமும், சீபாதங்களான ஆதிசத்தியால் ஆணவத்தைக் கெடுத்துத் திருவடிப்பேறு செய்தலுமாகிய ஞான தீட்சையுமுடைய திருக்கூத்தில் சத்தியோ நிருவாணமாதிய ஆறு வகைத் தீட்சையும் சிகாரமாதியான சூக்குமபஞ்சாக்கரமாய் நிற்கும். உபதேச தீட்சை, யோக தீட்சை, பரிச தீட்சை மூன்றனுள்ளும் சட்சு தீட்சையும், மானததீட்சையும், சாத்திரதீட்சையும் அடங்கும். ரு

(பி - ம்.) 1 ஒத்த அடியுபதே சம்யோக மேவாதம், ஒத்த வுபதேச நல்யோக மேவாதம். 2 பவுத்திரியே. 3 மிக்கான.

27 கண்டிலினி தாமுலகு கக்கினசோ றுய்ச்சிவமாய்க்
கண்டு பிரிவொருகாற் காணுமற்—கொண்டிடுமுன்
ஞ்தியிருள்[2] கீழிட் டருள்சிவமே லாகநடுப்
போதநிலை நின்றிடுமெய் பூண்டு.

(இ - ள்.) சர்க்கரை போல உருசித்த பிரபஞ்சம் கான்றசோறு போல அருசியாம்; எவ்விடமும் சிவநாட்டமே தோற்றமாய்ப் பொருளுடன் கூடின ஐக்கியம் இரண்டறக் கண்டு, கண்டவைக்கியம் தோற்றுமல் திரோதாயியையும், சிவானுபவ மேலீட்டால் ஆணவத்தையும் கீழ்ப்படுத்தித் தான் பரையிடமாக நின்று வாழ்வான். இதிற் பிரபஞ்சமெல்லாம் சிகாரமாயும், அதனுடைய தோற்றரவு வகாரமாயும், இரண்டற நின்று கண்ட நிலை தானுகவும்,சிவமிது அருளிது நாமிதுவென்று பகுப்பற நிறுத்தினது நகாரமாகவும் இவைகளெல்லாம் சிவானுபவ மேலீடாகவே வளர்தல் மகாரமாகவும் சூக்கும பஞ்சாக்கரம் நின்றவாறுணர்க. சு

(பி - ம்.) 1 கான்ற. 2 ஆதியருள்.

28 சுகப்பே றளித்தல்[1] சுகவொழிவிற்[2] றேன்றல்
சுகத்தோற்ற மற்ற சுகமே—மிகுத்தநிலை
யாக்கந் திதியழித்த லாதி மறைப்பொருளாற்[3]
காக்குந் தொழிலைந்துங் காண்.

(இ - ள்.) சிவானுபவ உதயம் சிருட்டியாகவும், அந்த அனுபவத்தை யொருவர் பெறுதல் திதியாகவும், அந்த அனுபவம் ஒருவனை யழித்து உதயமாதல் சங்காரமாகவும், அந்த அனுபவம் பிரிவறத் தோற்றமற்றிருத்தல் திரோபவமாகவும், சுகத்தின் மேலீடே அனுக்கிரகமாகவும், அனுபவத்திற் பஞ்ச கிருத்தியத்திற் சிகாரமாதியாகிய சூக்கும பஞ்சாக்கரம் நின்றவாறு காண்க. எ

1 ளுழித்தல். 2 சுகமழிவிற். 3 மறைப்புப் பொருளாற்.

29 தற்போக்குப் போக்கொருகாற் ருவாமற் றற்பரமாய்
நிற்போதம் போன நிறையுடைமை[1] —முற்போக்
குதய மிவைமறைத்தே யூட்டுதன் மேலும்[2]
புதுமைசெய லைந்தின் பொருள்.

(இ - ள்.) சிவானுபவமாகிய உதயத்தாற் தற்போதம் நட்டமாகத் தன் நிலை யழியாத இவனுக்கு அனுபவத்தைக் கொடுத்தல் வகாரமாகிய சிவானுபூதியாய் அந்தப் பொருளாகியே நின்று அனுபவிக்கிற இவன் பெறுதி நிறையாமல் நிற்பது யகாரமாகவும் இவனுடைய தற்போக்கு இவனுக்குத் தோற்றத்தே நகாரமாகவும் சிகார முதலாகச் சூக்கும பஞ்சாக்கரம் நின்றவாறு காண்க. அ

(பி - ம்.) 1 நிற்போன் போத நிறைவுடைமை. 2 மேன்மேலும்.

30 இன்ப மதில்விளக்க மின்பமதா கின்மைபெறு
மின்பமறைப் பின்பமே லீடிவைக—வின்பான
வோரெழுத்தி லஞ்செழுத்து மொன்ருக நிற்குமொரு
பேறெழுத்திற் பெற்றிடுமப் பேறு.

(இ - ள்.) சுகமும், சுகத்தோற்றமும், சுகத்துக்குச் சுகமில்லாமலுமே அனுபவிப்பா ளெருவனைக் காட்டுதலும், அனுபவம் அனுபவிப்பானுக்குத் தோற்ருமல் நிறுத்தலும், சுகத்தின் மேலீடுமிவை

ஓரெழுத்தாகிய சிகாரத்தில் அஞ்செழுத்துங் காண்கையால் ஓரெழுத்தாகிய சிகாரத்தைப் பெறுதியாகப் பெறுமிடத்துச் சிகார முதலாகிய சூக்கும பஞ்சாக்கரம் நின்றவாறு உணர்க. ௯

31 நின்ற நிலையே நிலையாய் நகாரமுத
னின்றுமறைப் பற்றுமல நீங்குதலாற்—றுன்றுசிவம்[1]
தாணு நிலையற் றதுதானற் றப்பொருளே
தாணுத லற்றநிலை[2] தான்.

(இ - ள்.) தூலபஞ்சாக்கரம் நின்ற நிலையதிலே சூக்கும பஞ்சாக்கரத்தைத் தரிசிக்கும்படி அஞ்சுமுதலையும் தரிசனப்படுகையிலே தெரியாமலே யாக்கின நகாரத்தையும், மலப்போக்கிலே அது தோன்றாமல் நின்ற மகாரத்தையும், சிவானுபவம் பெறுகையில் ஐக்கியத்தாற் பெறுதி நிகழாமல் நின்ற சிகாரத்தையும், அருளிடமாகப் பெற்றோமென்னும் நிலை நிகழாமல் நின்ற வகாரத்தையும், தான் நின்றனுபவிக்கையிலேதான் சற்று நிகழாமற்போன யகாரத்தையும் நகார முதலாக நின்ற தூலத்தைச் சூக்கும பஞ்சாக்கரமாக வுணர்க. ௧௦

(பி - ம்.) 1 நீங்குதலால்-தொன்று சிவம், நீங்குதலா - ஞென்று சிவம். 2 லாற்றநிலை.

32 நமவமுக்கி யச்சிவமாய் நாப்பண்ணி னிற்க
வமலமலத் தைக்கேட தாக்க—வெமையளிக்கு
மன்னையவண் முன்னு[1] மறைப் பானவளை நீக்கவிவை
யுன்னலற நிற்பதுதா னென்று.

(இ - ள்.) திரோதாயியையும் ஆணவத்தையுங் கீழ்ப்படுத்தித் தான் சிவமாய் அருளிடத்தே நிற்க, சிகாரம் மகாரத்தை யழிக்க, வகாரம் நகாரத்தை யழிக்க இவைகளிலே போக்கு நிகழாமற் றான் சிவமாய் நிற்பது சிகார முதலான சூக்கும பஞ்சாக்கரம். ௧௧

(பி - ம்.) 1 முன்னை.

33 குன்று முதலெழுத்துக் கூட்டெழுத்துக் கூடியுட[1]
ஞென்றாயு[2] மொன்றாகா[3] வொற்றெழுத்து—நின்றுந்
தெரியா விலக்கெழுத்துத் தீர்ச்சிதக் காயம்
பிரியா வெழுத்தென்று[4] பேசு.

(இ - ள்.) அனுபவ மேன்மேலும் வளரா நிற்பது சிகாரம்; அந்த அனுபவத்தை இவனுக்குக் கூட்டுமது வகாரம்; அனுபவத்துடன் கூடி யொன்றாய்ப் போகினும் அதனைப் பெறுமலே நிற்பது இவனுடைய குணமாதலால் ஒற்றர்களைப்5 போலே மறைந்து நிற்குமது யகாரம்; முன்னின்ற மறைப்பை விலக்கிச் சிவானுபவத்தையும் பெறுவானை யும் பிரித்துக் காணமல் நிறுத்துவது நகாரம். அந்தகாரத்தையும் தீர்வாகச் சிதக்கெழுத்துப்போல, எழுத்து வடிவு கெட்டாற்போல, சிதக்கென ஒன்று கிடந்தாற்போல, தான் கெடுகையிலும் நித்தங் கெடாத வாணவமாகிய மகாரம் முதலான ஐந்தும் நின்றவா றுணர்க.

(பி - ம்.) 1 கூட்டியுட. 2 நன்றாயும். 3 ஒன்றாக. 4 என்றே. 5 ஒற்றாட்களை.

34 மெய்யெழுத்திற் றன்வர்க்க மேலெழுத்தா மொன்றாகா[1]
வுய்யவிரண் டாகா வுயிரெழுத்து—பொய்யைமறைத்
தீறு மெழுத்துடனே யெய்துமக[2] ரக்குறுக்கம்
பேறாலே யின்பம் பெறும்.[3]

(இ - ள்.) சத்தியத்தைத் தருவதாகிய சிகாரமும், சிகாரத்திற் றன்வர்க்கமாகிய அருளான வகாரமும் சிவத்துடனே ஒன்றுபடுகை யிலே ஒன்றுமாகாமல் இரண்டு மாகாமல் உயிரெனப் பேர்பெற்ற யகாரமும், பெத்தத்தில் பிரபஞ்சத்தைப் பொய்யாக்காமல் மெய்யாக்கி வந்து தான் முத்தியிற் றற்குணம் கெட்ட நகாரமும், நித்தங்குலையாமல் தான் குறுகிநின்ற மகாரமுமான இவைகளை மெய்யெழுத் தென்றும் தன்வர்க்க மென்றும், ஈற்றெழுத் தென்றும், மகாரக்குறுக்க மென்றும் தமிழ் நடையால் அலங்காரஞ் செய்து சிகார முதலான சூக்கும பஞ் சாக்கரம் நின்ற நிலை யுணர்க. கரு

(பி - ம்.) 1 தன்வர்க்க மெய்யெழுத்தா லொன்றாகா. 2 எய் வமக. 3. பெறு.

35 ஒரெழுத்தாய் நாலெழுத்து ளொன்றவிரண் டிற்றோயாப்
பேரெழுத்தாய் நின்று பெருகின்பம்—பாரிறுதி
நாதாதி யுள்ளடக்கி நள்ளொடுகீழ் மேலிட்டு
வேதாதி யந்தமாம் வேறு.

[இது சிகார வகார சூக்கும பஞ்சாக்கரம் கூறினது.]

(இ-ள்.) சிகாரமாகிய சிவத்தினுடைய பூரணத்திலே அருளும், ஆன்மாவும், திரோபவமும், ஆணவமுமாகிய நாலெழுத்தும் பூரணமாய் நிற்க, இரண்டிற்றேயா யகாரமாகிய ஆன்மாவுடனும் மகாரமாகிய மலத்துடனும் தோயாமல் வகாரமாகிய அருளேயும் நகாரமாகிய திரோதாயியையும் தன்னெழுத்தாகக் கூடப் பேரெழுத்தாய்ச் சுக சொரூபியாய்ப் பிருதிவிமுதல் நாதமீருகப் பஞ்சகிருத்தியமும் நடத்தி அவைகளுக்கு அப்பாற் பட்டு வேதாந்த வத்துவாய் நிற்பது சிகாரம். கச

36 சைவா கமமிருபத் தெட்டுஞ் சதாசிவத்தி
னவ்வாறே யைந்துமுகத் தாங்குளவா—மிவ்வாறே
யீசானத் தெட்டிருபத் தீரிரண்டு மாமுகத்தாம்
பேசாய் சிகாரமுதற் பெற்று.[1]

(இ-ள்.) சதாசிவ நாயனாது ஈசானுதி பஞ்சமுகங்களினும் இருபத்தெட்டாகமங்களும் தோன்றின. அவை சத்தியோசாத முகத்திற் றேன்றின வாகமம் அஞ்சு, வாம முகத்திற்றேன்றியது அஞ்சு, அகோர முகத்திற் றேன்றியது அஞ்சு, தற்புருட முகத்திற் றேன்றிய ஆகமம் அஞ்சு, ஈசான முகத்திற் றேன்றிய ஆகமம் எட்டு; ஆக இருபத்தெட்டுந் தோன்றின ஈசானுதியாக, சிகாரமுதல் சூக்கும பஞ்சாக்கரம் ஐந்தும் நின்றதாக. ஞானபாதம் பெறுகைக் கேதுவாகவே யருளிச்செய்கையால் சிகாரம் முதல் நின்றது சூக்கும பஞ்சாக்கரம் என்று உணர்க. கரு

(பி-ம்.) 1 பேறு.

சூக்கும பஞ்சாக்கரம் முற்றும்.

---

## சீவன்முத்தர் ஞானபூசைக் கிரமம்[1]

37 ஒன்றே சிவானுபவ மோரெழுத்தா லுற்றிடுவ[2]
தொன்றே கொடுத்திடுவ தோரெழுத்தங்—கொன்றெதான்
ஓரெழுத்தின் பேறென்றே[3] வோரெழுத்துத் தான்
தோரெழுத்துப் போம்போக்கொன் றே. [மறைப்ப

[இது பஞ்சாக்கர பலம் சொன்னது]

(இ - ள்.) சிகாரம் அனுபவத்தைத் தருவதொரு வகையாக அமைவு பெறுதாகியும் வகாரம் அனுபவத்தைக் கொடுப்பதொரு தன்மைத் தல்லவாகவும், நகாரம் தான் அனுபவத்தையும் இவனையும் தெரியாமல் நிறுத்த லொருதன்மைத் தல்லவாகவும், மகாரம் தான் கெட்டு மேன்மேலும் அனுபூதி விளைத்துத் தற்கேடே நித்தமாகப் போவதொரு தன்மைத்தல்லவாகவும் ஞானவான்கள் இம்முறையே உபாதி சூனியம் பிறந்த விடத்திலே யனுபவிப்பார்கள். க

(பி - ம்.) 1 இதுமுதல் துரிய பஞ்சாக்கரமென்று அச்சுப் பிரதியிற் காணப்படுகிறது. 2 உற்றறிவ. 3 பேறென்றே.

38 வாக்கிறந்த பேரின்ப வாசகமா மஞ்செழுத்து
நோக்கியனு போக நுகர்வார்கள்—நீக்கியவா
றத்துவாவின் மந்திரங்க ளன்றியரு ளஞ்செழுத்தா
னித்தமுத லாசரிப்பர் நின்று.

(இ - ள்.) வாக்கு மனாதீதமாகிய வாசகமா மஞ்செழுத்தும் தரிசித்து அனுபூதியிலே நிற்பார்கள் வாசனாபோதம் அறும்வகைக்கு நித்தியகன்மம் முதலானவை யாசரிக்கும் பொழுது. சத்தியோ நிருவாண தீட்சையுட் சுத்தி செய்த ஆறத்துவாக்களுக்கு ஒன்றாகிய பஞ்சப் பிரம சடங்கங்களை உபாதியாக்கிச் சுத்தபஞ்சாக்கரத்தால் நித்தியகன்மம் முதலானவை ஆசரிப்பார்கள்.1 உ

1 பஞ்சாக்ஷர செபம் பண்ணினால் வாசனாமலம் போம். என்பது சி. போ. சூ. 3 சூர்.

39 அழிப்புறுபே ரின்ப வதீதநிலை நீங்கி
விழித்துப் பரையாம் வெளியில்—ஒழிப்பறவே
தம்மை யுலகோர் தனமக்காணு வண்ணம்போ
யம்மலமுன் சுத்திசெய்வா ராங்கு.1

(இ - ள்.) தான் அழியப்பெற்ற சுகாதீத நிலையாகிய ஆனந்த வனந்தலைப் பரையிலே விழித்து, அந்தப் பரையாகிய வெளியிலே தன்

னைத் தன்னாலும் பிறராலும் காணாவண்ணம் தற்போக்கையுடையாராய் அருள் மேலிட்டு மலத்திரயங்களை யொழிப்பது ஆசமனமாம்.[2] ௩

(பி - ம்.) 1 தம்மையுல கோர்தம்மிற் காணாத வண்ணம்போய்—அம்மலமுஞ் சுத்தி செய்வதாங்கு ; தம்மை யுலகோர் தம்மிற் காணாத வணம்—பொய்ம்மலமுஞ் சுத்தி செய்வதாங்கு. 2 சௌசம்.

40 வீடமல நீர்சிவமாம் வெள்ளவிதி[1] நீராடி
நீடுபரை யாங்கற்ப நீறாடி—நாடியதன்[2]
னிச்சைமுதன் மூன்றருளி னிச்சைமுதல் மூன்றாய்த்
தச்சலஞ்செய் மூர்த்திநம வற்று. [தீர்த்

(இ - ள்.) வாதனுபோத வொழிவே மலநானமாகவும், சிவானு பூதியிலே மூழ்கி யழுந்துவதே விதி நானமாகவும், பரையினுடைய நிலை தனக்குத் தனுவாகக் கற்பநீறாகிய பஸ்மத்தி லழிவதே பஸ்மநான மாகவும் செய்து, தன்னுடைய இச்சா ஞானக்கிரியை சிவனுடைய இச்சாஞானக் கிரியையில் அழிவதே அத்திர சலமாக வெண்ணிப் புரோக்கணம் பண்ணி நமவான திரோபவத்தையும் மலத்தையும் போக் குவதே தீர்த்திமூர்த்தி பண்ணுவதாம். ௬

(பி - ம்.) 1 வெள்ளவித. 2 ஆடியதன்.

41 தத்துவங்கண் மூன்றிற் றரணி முதன்[1] மாயை
சுத்தமுதன் மூன்றிரண்டு சுத்தியாய்ப்—பெத்தநிலை
யஞ்செழுத்தா லாசமனஞ் செய்துபிரா[2] ணாயாம
மஞ்செழுத்தாற் செய்திடுவ தாய்ந்து.

(இ - ள்.) தத்துவத் திரயங்களாகிய பிருதிவி முதலாகிய ஆன்ம தத்துவம் இருபத்து நாலும் மாயை முடிவான கலாதத்துவ மேழும் சுத்தவித்தை முதலான சிவதத்துவமைந்தும் இந்த முப்பத்தாறும் சுத்தியாகத் தக்கதாக பேதமாகிய தத்துவக் கட்டைச் சுத்த பஞ்சாக் கரத்தால் ஆசமனம்செய்து பிரணவத்தாற் பிராணாயாமம் செய்க. தற்போக்கும் சிவவுதயமுமாகிய இரேசக பூரகஞ்செய்து பிரணவ மாய்த் துக்காதீதமாகிய சிவத்தோடு இரண்டறக் கலப்பது கும்பகமாம்.

(பி - ம்.) 1 முதலா. 2 செய்பிராணாயாம. 3 சுத்திவாத்தக்கதாக

147880
600 008.
0-8194 MICV3 A132

42 அத்திரங்க ளஞ்சுமா[1] மஞ்செழுத்தா லேகரங்கள்
சுத்திசெய்தீ சானுதி சூழங்கி[2] —மொய்த்தவெழுத்
தஞ்சாற் கரங்களுட னங்கநியா தஞ்செய்தங்[3]
கஞ்சாலே சந்திநினை யாங்கு.

(இ - ள்.) ஐவகை யத்திரங்களுக்கும் ஆதாரமான இச்சா ஞானக் கிரியைகளைக் கொண்டு பஞ்சாக்கரத்திற் றரிசித்த முறையே கரசுத்தி பண்ணி ஈசானுதியும் அங்கங்களும் பெத்த பஞ்சாக்கரத்தின் நின்ற முறைமையைச் சுத்த பஞ்சாக்கரமாக மாறி கரநியாசம் அங்க நியா சங்களைச்செய்து, காலங்கடந்த பஞ்சாக்கர நிலையைச் சந்திகளாகத் தியானிப்பன். சு

(பி - ம்.) 1 உளைந்துமா. 2 சூழங்கமுய்த்த. 3 செய்தலஞ்சாலே.

43 சந்திகண்மூன் றற்றேக சந்திபரை யேகரியாய்ப்
புந்திசெய்தேக் காலுமொரு போதாக—வந்த
நியாதமுத லஞ்செழுத்தி னீர்கொண்டு கும்ப
தியானகரத் தான்மேற் றெளி.

(இ - ள்.) மூன்று காலங்களினின்ற சந்தி தேவதைகளின்றியே போக்குவரவற்றும் பூரணமாய் நின்ற பரையாகிய சிவசத்தியே ஏக சந்தியாக சாட்சியாக நினைந்து எப்பொழுதும் ஒரு காலமாகத் தியானித்து அங்கநியாசஞ்செய்து பஞ்சாக்கரமாகிய அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்தாலாகிய கும்பசலத்தாற் கும்பாபிடேகம் பண்ணிக் கொள் வாயாக. எ

44 மாற்சன மாக நகார மறைப்பற்று
மேற்சனனந் தீரிருளை வீட்டியதன்—பாற்செல்
லகமருட ணஞ்செய் தருண்மண் டலத்திற்
றகுசிவற் கர்க்கியஞ்செய் தாழ்ந்து.[1]

(இ - ள்.) திரோபவ மறைப்பாகிய நகாரத்தை யொழித்து அருளிலே நிற்பது மார்ச்சனமாகவும், செனன ஏதுவான ஆணவத்தைச் சிவவுதயத்தாற் கெடுத்தது அகமருடண ஸ்நானமாகவுங் கொண்டு, அருண்மண்டலமாகிய பரையிலே உதயமாயுள்ள சிவனுக்கு அர்க்கி

யாஞ்சலியாகத் தான் கீழ்ப்பட்டு அந்தச் சிவன் மேற்பட்டு நிற்பது சிவனுக்கு அர்க்கியம் கொடுக்கு முறைமை யென்பதாம். அ

(பி - ம்.) 1 தகுசிவற் கஞ்சலிஞ்செய் தாழ்ந்து.

45 ஆசிலருள்வடிவே யானசக ளீகரணம்
பூசைதனக் கஞ்செழுத்தாற் போற்றிசெய்து—பேசாப்
பிரணவஞ்சே ரஞ்செழுத்தாற் பின்பர்க் கியஞ்செய்
தரனருளா[1] கத்தெளிப்பா யாங்கு.

(இ - ள்.) தூலதேகமும் சூக்குமதேகமும் மந்திரதேகமு மற ஞானமே வடிவமாகச் சகளீகரணஞ் செய்து, சிவார்ச்சனை செய்வான், பிரணவத்திற் பெத்தபஞ்சாக்கரம் மாறி முத்திபஞ்சாக்கரம் நின்ற நிலையே அர்க்கியம் தாபித்து, அந்த ஞான ஜலத்தாலே அவ் விடமும் சிவபரிபூரணமாகப் புரோட்சிப்பான். கூ

(பி - ம்.) 1 அருளேயாய்த் தெளி.

46 அவனிமுத லாதாந்த மஞ்செழுத்து[1] ணின்ற
சுவடு துவாரமதாய்த் தோன்ற—அவைசிவமாம்[2]
எங்கும் பரையாந் துவாரத்தி லெய்திடுவா
ரங்குநம விக்கினங்க ளற்று.

(இ - ள்.) பிருதிவிமுதல் நாதமீறாகப் பஞ்சாக்கரத்துக்குள் அடங்கி நின்ற நிலையைத் தானமாக்கி, இந்தத் தத்துவங்களை நாட்டிக் கழற்றியே துவாரத்துப் பிரவேசிப்பதாக நினைந்து பரையாகிய துவாரத்திற் புகுந்து அஞ்செழுத்தாகிய பஞ்சாக்கர நிறைந்த கும்ப ஜலத் தாற் கும்பாபிடேகம் பண்ணிக்கொள்வதனல் திரோபவமும் மலமு மாகிய விக்கினங்களைப் போக்கி நிற்பார்கள். கo

(பி - ம்.) 1 அஞ்செழுத்தால். 2 தோன்று மவைதரிசித்து.

47 முத்தி நிலையளிக்கு முற்பரையாம் வாயிலிடை
யத்திரமா மிச்சாஞா[1] னக்கிரியைச்[2] —சத்திகளை
யேத்திநம வாத்து பதிப்பிரமற்[3] கெட்டாத
வாத்துபதி யைப்பணிந்து வாழ்.[4]

(இ - ள்.) மோட்ச வாயிலைத் தந்த பரையாகிய வாயிலுள் இச்சா ஞானக் கிரியா சத்திகளை வழிபட்டு நகார மகாரமாகிய திரோபவத்தை யும் ஆணவத்தையும் பிரியாத வாத்துபதிப் பிரமனுக்கும்5 எட்டாத ஞானபூமியாகிய வாத்துபதியை யர்ச்சிப்பாய். கக

(பி - ம்.) 1 அத்திரமா யிச்சா. 2 கிரியா. 3 நமவாம் பிராமண னுக். 4 வாழ்த்து. 5. பிராமணனுக்கும்.

48 சித்தாந்த மோரிருபத் தெட்டுஞ் சிகாரமுதல்
வைத்தாரை யஞ்செழுத்தால் வந்தித்துச்[1] —சுத்தமா
மஞ்சா மெழுத்தால் நிவர்த்திகலை யா திகழித்[2]
தெஞ்சா நடம்போ யிறைஞ்சு.

(எ - து.) சிவாகமம் இருபத்தெட்டையும் ஈசானுதி பஞ்சமுகங் களினும் அருளிச் செய்தும் சிகார முதலாகிய சூக்கும பஞ்சாக்கரத்தை யனுக்கிரகித்தவனுமான ஆதி குருவாகிய சதாசிவ மூர்த்தியைச் சுத்த பஞ்சாக்கரத்தாலே நியசித்து,[3] நிவிருத்தியாதி பஞ்ச கலைகளிற் சஞ் சித கன்மத்தைச் சுத்த பஞ்சாக்கரத்தாலே தரிசித்து, பூதசுத்தி பண்ணி முன் சொன்ன பஞ்சாக்கரமான திருக்கூத்தில் இரண்டற நிற்குமதே அந்தர்யாக பூசையாம். கஉ

(பி - ம்) 1 வஞ்சித்து. 2 ஆதியழித்து. 3 அர்ச்சித்து.

49 தூயவெழுத் தாலாடுந் தூக்கியதா ணோக்கியழி[1]
வாயநிலை யந்தரியா கஞ்செய்தே—மேயவெழுத்
தஞ்சால் விசேடார்க் கியஞ்செய் திரவியங்க
ளஞ்சாலே சுத்திசெய்வா யாங்கு.

(இ - ள்.) சுத்த பஞ்சாக்கரத்திலே முதலெழுத்தாஞ் சிகாரமாகிய விபூதியே[2] திருக்கூத்தாகக் கண்டு பூசைசெய்வதே அந்தர்யாக பூசை யாக்கி, அச்சுத்த பஞ்சாக்கரத்தாலே விசேடார்க்கியம் கற்பித்துப் பிர பஞ்ச முழுதுஞ் சுத்த பஞ்சாக்கரமாகக் காணுமதுவே திரவிய சுத்தி.

(பி - ம்.) 1 நோக்கியதே யாய. 2 அனுபூதியே.

50 ஆனந்த மூலத்தை[1] யன்பெழுத்தே வற்புரிய
வானந்தி பூசைசெய வவ்விரண்டுந்—தானந்த

மாகவதி லோவாத வர்ச்சனையா லான்மாவுக்
காகவரு சுத்திசெய்வ தாங்கு.[2]

(இ - ள்.) ஆனந்த மூலமாகிய[3] சிவனை இரண்டா மெழுத்தாகிய அருளாலே யேவல் செய்ய, ஆனந்தியாகிய வான்மா மாண்டு அற ஐக்கியம் பிரவேசிப்பதே சிவபூஜையாக,[4] நகார மகாரங்களாகிய விக்கினங்களைக் கெடுத்து, ஒழியாத ஐக்கியமாகிய சிவோகம் பாவனையே ஆன்மசுத்தியாம். கசு

(பி - ம்.) 1 மூலத்தே. 2 ஆகவரு சுத்திசெய்யா யாங்கு, ஆகவஞ் சுத்தி செய்யா யாங்கு. 3 முதலாகிய. 4 இரண்டற வயிக்கம் பிறப்பதே.

51 மூவைந்து தூலத்தின் மூவைந்து சூக்குமத்தின்
மேவைந் தெழுத்தின் விதிப்படியே—நாவொன்றச்
சொல்லாத வைந்தெழுத்தின் சுத்தியென வைந்துமற
நில்லா நிலையாகி நில்.

(எ - து.) பதினைந்து வகையாகிய தூல பஞ்சாக்கரத்தைப் பதினைந்து சூக்கும பஞ்சாக்கரத்தின் பொருளாகவே வேறுபாடற வுணர்ந்து நாவாற் சொல்லாமல் அறிவாற் பஞ்சாக்கரத்தை யனுபவிப்பதே மந்திரசுத்தியாக நில்லா நிலையில் நிற்பாயாக. கரு

52 ஒன்றுமிலா னிச்சை யுருவாகி[1] யைந்தொழிலி
னின்றநிலை மாலியத்தை நீக்கியவ—னென்றும்
பரையா லனுபவத்தைப் பண்ணுநமப் பாழா
முரையா லிலிங்கசுத்தி யோது.

(இ - ள்.) ஒரு உபாதிகளு மற்று நின்மலச் சுகசொரூபியாயுள்ள சிவன் என் வடிவொழித்தற்பொருட்டு வடிவாகிய பஞ்சகிருத்தியங்களைப் பண்ணினன், இவனுக்கு இந்த பஞ்சகிருத்தியமே நின்மாலியமென்று பரியுசித[2] பூசையாகச் சிவனுடன் அயிக்யம் பண்ணின மாலியத்தை நீக்க அவன் பரையிடத்தே நம்மை வைத்து அனுபவத்தைத் தருவதே நகார மகாரங்களுக்கு எட்டாததாய[3] இலிங்க சுத்தியாம். கசா

(பி - ம்.) 1 உருவாக்கி. 2 பரிவுஷத. 3 கேடாவதாய.

53 அங்கஞ் செழுத்தாலு மானைஞ் சமுதஞ்சு
தங்குமழி வாமஞ்[1] சனஞ்செய்து—மங்கியிடுந்
தன்வா தனைமாற வொற்றுடை சாத்தியுவ்வா
மென்மாசி லாசனத்தி லேற்று.

(இ - ள்.) சுத்த பஞ்சாக்கரத்தால் பஞ்சகவ்வியம் பஞ்சாமிர்தம் இவைகளையும், தன்னறிவே திருமஞ்சனமாகவும் செய்து பிரபஞ்ச வாதனை தனக்குக்கெட திரு ஒற்றுடை சாத்தி உகாரமாகிய ஆன்மாவிலே சிவாசனமாக எழுந்தருளப் பண்ணுவது. கஎ

(பி - ம்.) 1. தங்குவழியா.

54 ஆதார சத்திமுத னாதாந்த வஞ்செழுத்தின்
மீதான வாசனத்தை[1] வெவ்வேறு—சோதனையிற்
றன்னுணர்வாற் கண்டேயுந் தானுணர்ந்த ஞானத்தை
யுன்னுமதே மூர்த்தமதா[2] யோது.

(இ - ள்.) ஆதார சத்தி முதலாக நாதமிறுதியாகக் கீழ்ப்படுத்தின ஆன்ம வாசனமாகிய பஞ்சாக்கரத்தின் அனுசந்தானத்துடனே நிற்கின்றதான இவைகள் யாவையுங் கண்டு சேடமென்று நீக்கித் தன்னிடத்தில் உதயமாகிய ஞானத்தைச் சிவமூர்த்தியாகக் கற்பிப்பான்.

(பி - ம்.) 1 ஆதனத்தின். 2 அர்த்தமதா.

55 முன்னெழுத்தா மானந்த மூலத்தை யாவாகித்
துன்னுநிலை தானேக்க மொன்றுபட—லென்னவருந்
தாபனமே யாதிசெய்து தானந்த மாதிமல
ராபரண மாதிகளா யாக்கு.

(இ - ள்.) முன்னெழுத்தாகிய சிகாரமாகிய வானந்தத்தை மூலமாக எவ்விடமும் பூரணமாக இரண்டறக் காண்பதே யாவாகனமாகத் தியானித்து, அவனுடைய நித்தியத்தையும், தனக்கே இலாபமாக்கி நின்றதன்னையும் பாசத்தையும் தன்னுடனே இரண்டற்ற வைக்கியத்தையும் தாபன சன்னிதான சன்னிரோதனமுமாகச்செய்து தன்னையே சுகந்தம் புட்பம், வத்திரம் ஆபரண முதலானதாகவும் தூப தீபாதிகளாகவும் பஞ்சாக்கரத்தாற் கொடுப்பன். கக

56 தன்னறிவே நைவேத்யம் தன்னறிவே பானீயந்
தன்னறிவே தாம்பூலந் தானாக—முன்னருளே
வாய்த்தமுக வாச மணிசிவய[1] தூபாதி
தீர்த்தநம வென்றுணர்வாற் செய்.

(இ - ள்.) ஆன்ம நிவேதனமே நைவேத்தியமும் பானீயமுந் தாம்பூலமுமாக நிவேதித்து அருளாகிய முகவாச வுண்டையாற் திரு வாய் மாற்றி, சிகாரம் மணியாக்கி, வகாரமும் யகாரமும் தூபதீபாதியாக வும், நகார மகாரமான தீர்த்தத்தையுஞ் சேர்ப்பாய். உ0

(பி - ம்.) 1 மணிசிவமாய்.

57 நீராஞ் சனமெய்ந் நிறைவு பரைநீறு
பாரார்கண் ணாடியுயிர் பற்றுகுடை—சேருமறைப்[1]
போச்சு கவரி யுடனால வட்டமுதல்
வாச்சமலக் கேடாக வை.

(இ - ள்.) சிவனுடைய பூரணத்தின் நிறைவு திருவாலத்தி, பரை திருநீற்றுக்காப்பு, ஆன்மாவிடத்திலே சிவவுதயம் திருக்கண்ணாடி, சிவத்தோற்றம் ஒழியப் பிரபஞ்ச மறைப்பு திருக்கொற்றக் குடை, திருவெண்சாமரையுந் திருவாலவட்டமும் பாசச் சேதனம். உக

(பி - ம்.) 1 தோராமை யோச்சு.

58 பாத்தியநீர் தானாய்ப் பரையா சமனமாய்
மூர்த்திசிவ மர்க்கியமாய் முன்னைநம—நீத்திறைஞ்சி
யெண்ணியுரு[1] வஞ்செழுத்து மெண்ணியிறைக் கீந்து
பண்ணருளில் வீழ்ந்து பணி. [வலம்

(இ - ள்.) ஆன்மபாவம் கெடத் திருவடியிலே அயிக்கம் பண்ணு தல் பாத்தியமாகவும் பராசக்தி நிலையே யாசமனமாகவும், சுகசொரூப மே யர்க்கியமாகவும் கொடுத்து நகார மகாரங்கள் கெட நமக்காரஞ் செய்து நூறு நூறுயிர முருவாகவே பஞ்சாக்கரத்தைச் செபித்துச் செபத்தையுந் தன்னையுஞ் சிவனுக்குக் கொடுத்துப் பிரதக்கணம் பண்ணி நமக்கரிப்பாய். உஉ

(பி - ம்.) 1 யெண்ணி திரு.

59 குண்டலியாங் குண்டத்துக் கூடுபரை யக்கினியி
லண்டனுக்குத் தன்னழிவே யாகுதியாத்—தொண்டுசெய்து
சென்றளித்துத் தற்சுத்தி செய்தல் பவித்திரந்தா
னென்றிறைஞ்சா யட்டமல ரிட்டு.

(இ - ள்.) விந்துத்தானமாகிய வக்கினி குண்டத்துப் பரையாகிய அக்கினியினிடத்திலே தற்போக்காகிய வழிவே சிவனுக்காகுதியாகச் சுத்த பஞ்சாக்கரத்தாற் செய்து ஓம பலத்தைச் சிவனுக்கு நிவேதித்துத் தான் அற நிற்றலே திருப்பவுத்திரமாகச் சாத்தி அட்டபுட்பமாகவுஞ் சாத்துவாய். உரு

60 அஞ்செழுத்தா லட்டமல ரிட்டிறைஞ்சிப் பூரணமா
மஞ்செழுத்தான் மூர்த்திசெய்தே யாதரித்து—நெஞ்சு
ஞானகுருத் தாளிணையி னுண்மலரிட் டர்ச்சித்தால் [ருகி
ஞானநெறி யர்ச்சனையா நன்கு.

(இ - ள்.) பஞ்சாக்கரத்தால் அட்டபுட்பம் சாத்தி நமக்கரித்து பூரணமாய்ப் போக்குவரவற்று சுத்தபஞ்சாக்கரத்தாலே சிவனை மூர்த்தி பண்ணி பத்தியினுல் உள்ள முருகி ஞானசாரியனை நமக்கரித்து அர்ச்சிப்பது ஞான பூசையாம். உ௬

சீவன்முத்தர் ஞானபூசைக் கிரமம் முற்றும்.

---

## உரையாசிரியர் வாழ்த்துரை

காழிநகர் வாழி கவுணியர்கோன் ரூள்வாழி
வாழியருட் கண்ணுடைய வள்ளல்தாள்—ஏழிசையின்
தெய்வத் தமிழ்ப்பாடல் வாழி திருநெறியாஞ்
சைவத் தவர்வாழி தான்.

# செய்யுள் முதற்குறிப்பகராதி


| | | |
|---|---|---|
| அகராதி | ... | 5 |
| அங்கு | ... | 53 |
| அஞ்செழுத்தால் | ... | 60 |
| அஞ்செழுத்தும் | ... | 3 |
| அத்திரங்கள் | ... | 42 |
| அவனிமுத | ... | 46 |
| அழிப்புறு | ... | 39 |
| ஆசிலருள் | ... | 45 |
| ஆதார | ... | 54 |
| ஆனந்தமாட | ... | 23 |
| ஆனந்தமூல | ... | 50 |
| இன்பமதில் | ... | 30 |
| ஒத்ததுடியில் | ... | 26 |
| ஒன்றுமிலா | ... | 52 |
| ஒன்றே சிவானுபவ | ... | 37 |
| ஓங்கு | ... | 7 |
| ஓரெழுத்தாய் | ... | 35 |
| கண்டிவினி | ... | 27 |
| கல்லேன் | ... | 2 |
| கன்மசாதா | ... | 13 |
| குண்டலி | ... | 59 |
| குன்றுமுத | ... | 33 |
| சத்திகடான் | ... | 17 |
| சந்திகள் | ... | 43 |
| சாக்கிரமே | ... | 11 |
| சித்தாந்த | ... | 48 |
| சுகப்பேறு | ... | 28 |
| சேர்ந்த | ... | 10 |
| சேர்த்த விதயம் | ... | 15 |
| சைவாகமம் | ... | 36 |
| தத்துவங்கள் | ... | 41 |
| தற்பதத்தில் | ... | 25 |
| தற்போக்கு | ... | 29 |
| தன்னறிவே | ... | 56 |
| தாபரமாம் | ... | 4 |
| தானில்லை | ... | 21 |
| தூயவெழுத் | ... | 49 |
| தூலமிது | ... | 22 |
| தொழுதிடுதல் | ... | 6 |
| நமவமுக்கி | ... | 32 |
| நின்றநிலையே | ... | 31 |
| நீராஞ்சன | ... | 57 |
| படைத்தும் | ... | 18 |
| பரைதுடி | ... | 24 |
| பன்னுவியோமா | ... | 14 |
| பாத்திய | ... | 58 |
| பிரமன் | ... | 8 |
| பிராணாதி | ... | 19 |
| மண்ணீர் | ... | 9 |
| மாற்சனம் | ... | 44 |
| முத்திநிலை | ... | 47 |
| முன்னெழுத்தா | ... | 55 |
| மூவைந்து | ... | 51 |
| மெய்யெழுத்தில் | ... | 34 |
| வருஞ்சத்தி | ... | 12 |
| வாக்கவையாம் | ... | 16 |
| வாக்கிறந்த | ... | 38 |
| வாரம் | ... | 1 |
| வித்தைகலை | ... | 20 |
| வீடமல | ... | 40 |